மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

105—

வாசனைத் திரவியத் தொழிற்சாலை

6030*—திரு. க. பாலகிருஷ்ணன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, பரங்கிப்பேட்டையில் மல்லிகை வாசனைத் திரவியத் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) எந்தவொரு தொழிற்சாலையையும் MSME Department *குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை நேரடியாக நடத்த முடியாது. ஆர்வம் உள்ள தொழில் முனைவோர்கள் சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி, பரங்கிப்பேட்டை வட்டாரத்தில் மல்லிகை சென்ட் தயாரிக்கும் தொழில் நிறுவனம் தொடங்க முன்வந்தால், அவர்களுக்குத் தகுதியின் அடிப்படையில் மானியங்கள் மற்றும் தேவையான வழிகாட்டுதல்கள் கடலூர் மாவட்ட தொழில் மையத்தின் மூலமாக வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் பகுதியில் மல்லிகைப் பூ சாகுபடி மிக அதிகமாக நடைபெற்று வருகிறது. பி. முட்லூர், சி. முட்லூர், புவனகிரி, வல்லம்படுகை, புதுச்சத்திரம், பரங்கிப்பேட்டை*

2012 ஏப்ரல் 17]

உள்ளிட்ட 80–க்கும் மேற்பட்ட கிராமங்களில் பூ சாகுபடி நடைபெறுகிற காரணத்தினால் அந்த விவசாயிகளுடைய வாழ்வாதாரம் அதை நம்பித்தான் இருக்கிறது. பல நேரங்களில் அந்தப் பூவின் விலை கிலோ 50 ரூபாய், 60 ரூபாய்க்கு வீழ்ச்சியடைந்து விடுகிற காரணத்தினால் அவர்களுடைய வாழ்வாதாரம் மிகவும் நெருக்கடிக்கு ஆளாக்கப்படுகிறது. எனவே, இந்தப் பூவையெல்லாம் பயன்படுத்தி ஒரு வாசனைத் திரவிய தொழிற்சாலை அங்கே அமைக்கப்படுகிறபோது அந்த விவசாயிகளுடைய வாழ்வாதாரத்தைப் பெருக்குவதற்கு அது நல்ல வாய்ப்பாக அமையும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல, அந்த சிறுதொழில் நிறுவனத்தின் மூலமாக, ஆர்வம் உள்ளவர்கள் அந்தத் தொழிற்சாலையைத் துவங்க முன்வந்தால் அரசு உதவி செய்யும் என்கிற அந்த உறுதிமொழியின் அடிப்படையில், மாண்புமிகு அமைச்சர் அவர்களே முன் முயற்சி எடுத்து—அதற்குத் தேவையான நிலங்களெல்லாம் அங்கேயே இருக்கின்றன. நிலம் கையகப்படுத்துகிற அப்படிப்பட்ட கஷ்டம் எல்லாம் அங்கு ஒன்றுமில்லை. எனவே, அந்த சிறுதொழில் நிறுவனத்தின் மூலமாகவே அதை விரைவில் துவங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியில், பரங்கிப்பேட்டை வட்டாரம் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய வட்டாரம். அங்கு 125 எக்டேர் நிலத்தில்தான் மல்லிகை சாகுபடி செய்யப்படுகிறது. அதை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது ஆண்டுக்கு 1,090 கிலோ கிராம் கிடைக்கின்றது. கிட்டத்தட்ட 5 டன் கிடைத்தால்தான் அங்கே மல்லிகைப் பூ சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்குவற்கு சாத்தியக் கூறு இருக்கின்றது. 5 டன்னுக்குக் குறைவாக இருந்தால் அந்தத் தொழில் இலாபகரமானதாக இருக்காது. மல்லிகை ஒரு பருவ காலப் பயிர். ஆண்டு முழுவதும் கிடைக்காது. மகளிர் சூடுவதற்காகவும், வழிபாட்டுத் தலங்களுக்காகவும், பூமாலை செய்வதற்கும் மல்லிகைப் பூ ஒட்டுமொத்த உற்பத்தியும் தேவைப்படுகின்றது. இன்றைக்கு ஒரு கிலோ மல்லிகைப் பூவினுடைய விலை 100 ரூபாயிலிருந்து 200 ரூபாய் வரை

விற்கப்படுகிறது. மல்லிகைப் பூ எப்போதுமே 50 ரூபாய்க்கு விற்கப்படவில்லை. 30 ரூபாய்க்கு வந்தால்தான் அங்கே தொழிற்சாலை தொடங்குவதற்கு—அந்தத் தொழில் இலாபகரமாக இயங்குவதற்கு சாத்தியம் உள்ளது. தற்சமயம் வெளிச்சந்தையில் ஒரு கிலோ மல்லிகைப் பூவினுடைய விலை 100 ரூபாயிலிருந்து 200 ரூபாய் வரை விற்கப்படுகிறது என்பதைத் தெரிவித்து, மேலும், மாண்புமிகு உறுப்பினர் எனது மாவட்டத்திற்கு வேண்டியவர், இது இலாபகரமாக இருந்தால் அங்கே தொடங்கலாம் என்று இருந்தால், உரிய ஆலோசனைகளைப் பெற்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு சிந்திக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், அமைச்சருடைய பதில் மல்லிகைப் பூ வாசம் போல இருக்கிறது. இதற்குமேல் துணைக் கேள்வியா? (சிரிப்பு)

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அங்கே விலை வீழ்ச்சியடைகிற காரணத்தினால்தான் விவசாயிகள் ஆர்வமாக அந்தச் சாகுபடியை விரிவுபடுத்த முடியாமல் இருக்கிறார்கள். நாம் முயற்சி எடுத்து அப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலை அமைகிறபோது, இன்னும் பரவலான விவசாயிகள் அந்தச் சாகுபடியை மேற்கொண்டு, நீங்கள் சொல்கிற 5 டன்னுக்குக் குறையாத அளவிற்கு அங்கே உற்பத்தி செய்ய முடியும் என்பதைத் தெரிவித்து, அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை ஒரு டன் மல்லிகைப் பூதான் உற்பத்தியாகிறது. 5 டன் வருவதற்கு வெகுகாலங்கள் பிடிக்கும். அந்தக் காலங்களில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கருத்துகளை இந்த அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2012 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். எங்களுடைய தென் மாவட்டங்களில் மல்லிகைப் பூவினுடைய விளைச்சல் மிக அதிகமாக இருக்கிறது. திண்டுக்கல், சிலுக்குவார்பட்டி, மதுரையினுடைய சோழவந்தான் பகுதி போன்ற பகுதிகளில்—சிதம்பரத்திற்கு வழங்கியிருக்கக்கூடிய பதில் மிகவும் நம்பிக்கையளிக்கிறது. ஆகவே, நம்முடைய மாநிலத்தில் எங்கெல்லாம் இந்த மல்லிகைப் பூ விளைகிறதோ அந்தப் பகுதிகளைக் கண்டறிந்து, ஒரு வாசனைத் திரவிய தொழிற்சாலையை உருவாக்கினால்கூட அது மாநில அரசுக்கும் பயன்படும், மக்களுக்கும் பயன்படும், குறிப்பாக விவசாயிகளுக்கும் பயன்படும். அதுகுறித்து எதிர்காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலோசிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்ட சுற்றுப் பகுதிகளில் விளையும் மல்லிகைப் பூ, மாலைகள் மற்றும் பூ வியாபாரம் போன்ற அன்றாட பயன்பாட்டிற்கே பெரும்பாலும் பயன்படுகின்றது. மல்லிகைப் பூ ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் அதிக அளவில் கிடைக்கப் பெறுகின்றது. அப்பருவ காலத்தில் மட்டுமே மேற்காணும் தொழிற்சாலைகளை இயக்க வாய்ப்பிருக்கிறது. தொடர்ந்து இயக்க முடியாது. மற்ற காலங்களில் அந்தத் தொழிற்சாலைகளை Shut down– செய்து மூட வேண்டியது இருக்கும். அந்த அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மல்லிகைப் பூ சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலை மிகுந்த இலாபம் தரக்கூடிய தொழிற்சாலையாக அமையப் பெறவில்லை. எனவே, இதில் சாத்தியக்கூறு இல்லை என்பதை நான் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.